செ.வெ.எண்: 427 நாள்: 07.07.2019

# புதுக்கோட்டை மாவட்டத்தில் பொதுமக்களின் நலனுக்கான வளர்ச்சித்திட்டப் பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.

---

புதுக்கோட்டை நகராட்சியில் முடிவுற்ற பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (07.07.2019) துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலனுக்காக பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகளை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் இன்றையதினம் புதுக்கோட்டை நகராட்சி, சாந்தநாதபுரத்தில் தலா ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட 2 சிறுமின் விசை இறைப்பான்கள் பணியையும், இராஜகோபாலபுரம் நகராட்சி தொடக்கப்பள்ளியில் ரூ.11.5 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறை கட்டடப் பணியையும், சார்லஸ்நகரில் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட நகராட்சி பூங்கா பணியையும் என மொத்தம் ரூ.39.50 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

புதிதாக திறக்கப்பட்ட நகராட்சி பூங்காவில் பெரியவர்கள் நடை பயிற்சி மேற்கொள்ளும் வகையில் 8 வடிவ நடைபாதை அமைக்கப்பட்டுள்ளதுடன், குழந்தைகள் விளையாட நவீன விளையாட்டு உபகரணங்களும், அழகு செடிகள், பசுமையான புல்வெளி போன்ற நவீன வசதிகளுடன்

அமைக்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி கூடுதல் வகுப்பறை கட்டடத்தின் மூலம் பள்ளி மாணவ, மாணவிகள் போதிய இடவசதியுடன், கல்வி கற்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முன்னதாக கந்தர்வக்கோட்டை அரசு போக்குவரத்து பணிமனையில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் 157 மீட்டர் நீளத்தில் கட்டப்பட உள்ள பாதுகாப்பு சுற்றுச்சுவர் பணிக்கான பூமிபூஜையும் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் பொதுமக்களின் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதன்மூலம் புதுக்கோட்டை மாவட்டத்தில் பொதுமக்களின் நலனுக்கான வளர்ச்சித்திட்டப் பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்படும். எனவே பொதுமக்கள் இதனை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் இலுப்பூரிலிருந்து ஊனையூர் வழியாக திருச்சி செல்வதற்கான புதிய பேருந்து வழித்தடத்தினை ஊனையூரில் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.பா.ஆறுமுகம் (கந்தர்வக்கோட்டை), திரு.இ.ஏ.இரத்தினசபாபதி (அறந்தாங்கி), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பொது மேலாளர் ஆறுமுகம், நகராட்சி ஆணையர் (பொ) ஜீவா சுப்பிரமணியன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.நெடுஞ்செழியன், கூட்டுறவு சங்கத் தலைவர் வி.ராமசாமி, ஆத்மா குழுத்தலைவர்கள் சாம்பசிவம், ரெங்கராஜன், மத்திய தொலைத்தொடர்பு ஆலோசனைக் குழு உறுப்பினர் பாஸ்கர், முன்னாள் நகர்மன்ற துணைத்தலைவர் சேட் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**